International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 01 January to March 2021 www.irjtsjournal.org

# திருக்குறளில் நேரமுகாமைத்துவம்: உண்மை நேரமும் உணர்வு நேரமும்

# (Time Management in Thirukkural: Real Time and Emotional Time)

விஜிதா திவாகரன்

*விரிவுரையாளர், மொழித்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*சமகால நவீன முகாமைத்துவச் சிந்தனைகள் பண்டைத் தமிழிலக்கியங்களிலும் பரவலாக எடுத்துக் கூறப்பட்டுள்ளமையைச் சங்க இலக்கியங்கள், சங்கம் மருவியகால இலக்கியங்கள் உள்ளிட்ட பண்டைத் தமிழிலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. சமகால நவீன முகாமைத்துவச் சிந்தனைகளில் முதன்மை வாய்ந்ததாக விளங்கும் நேர முகாமைத்துவம் பற்றி அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் எடுத்துரைக்கும் உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் காண முடிகின்றது. மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் நேரம் என்பது மிகவும் இன்றியமையாததும் முகாமை செய்யப்பட வேண்டியதும் ஆகும். இந்த ஆய்வுக் கட்டுரையில் திருக்குறளில் கூறப்படும் நேரமுகாமைத்துவச் சிந்தனைகளை எடுத்துக் கூறி, வள்ளுவர் நேரத்தை உண்மை நேரம் எனவும் உணர்வு நேரம் எனவும் பிரித்துக் கூறியமை பற்றி எடுத்து ஆராயப்படுகின்றது. திருக்குறளில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் நேரம் பற்றிய சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன. நேரம் மனித வாழ்க்கையில் இரு வேறு விதமாகத் தொழிற்படுவதனைத் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்விற்காகத் திருக்குறள் முதன்மை ஆதாரமாகவும் திருக்குறள் தொடர்பாகவும், நேர முகாமைத்துவம் தொடர்பாகவும் வெளிவந்துள்ள எழுத்தாவணங்கள் துணை ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தவகையில் மனித வாழ்க்கையில் நிர்வாகம், கடமை, உணர்வுகள் ஆகியவற்றில் நேரம் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. தொழில் வாழ்க்கையில் நேரமுகாமை இன்மையினால் முரண்பாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஊடலும், பிரிவும், மனக்கசப்புகளும் ஏற்படுவதைத் திருக்குறள் மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றது.*

**முதன்மைச் சொற்கள்:** சமகால முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், திருக்குறள், தொழில்வாழ்க்கை

## *I. முன்னுரை*

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல் வரிசையில் முதன்மையாக விளங்குவது திருக்குறள் ஆகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்நூலானது பல்வேறு அறக்கருத்துக்களையும், வாழ்வியல் நெறிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலானது வெறுமனே இலக்கியக் கருத்துக்களையும், சிந்தனைகளையும், அறப்போதனைகளையும் மட்டுமன்றி, இன்றைய நவீன உலகிற்கு ஏற்ற கல்விச் சிந்தனைகளையும், சமகால முகாமைத்துவச் சிந்தனைகளையும் எடுத்துக்கூறுகின்றது.

“எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்

© 2021, IRJTSR

இல்லாத எப்பொருளும் இல்லை''

என்று திருக்குறளின் புகழ் பாடும் 'திருவள்ளுவமாலை'யின் பாடல் வரிகளுக்கு அமைவாக எங்கும் 'உலகப் பொதுமறை'யாக எல்லாப் பொருளும், எக்காலத்திற்கும் பொருந்தும் பொருட்சிறப்பும் இதனுள் புதைந்து கிடக்கின்றது.

உலக மக்களுக்கு வேண்டிய பல அரிய கருத்துக்களைக் கூறும் திருக்குறளில் சமகால நவீன முகாமைத்துவச் சிந்தனைகளுள் முதன்மையாக விளங்கும் 'நேர முகாமைத்துவம்' பற்றிய சிந்தனைகளும் கருத்துக்களும் குறட்பாக்களின் வாயிலாக இன்றைய காலத்திற்குப் பொருந்தும் வகையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. திருக்குறளில் கூறப்படும் நேரமுகாமைத்துவச் சிந்தனைகள் எடுத்துக்கூறப்பட்டுள்ள விதம் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

### *II. நேரம் - பொழுது - காலம்*

மனித வாழ்க்கையில் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைவது நேரம் மற்றும் காலம் என்று கூறலாம். தமிழ்மொழியைப் பேசும் சமூகங்களில் ''எல்லாம் நேர காலம்தான்'',''நேரம் சரியில்லை''. ''காலம் வாய்ப்பில்லை'',''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' போன்ற பேச்சுவழக்குரீதியான வாக்கியங்கள் பாவனையில் உள்ளமை அவதானிக்கத்தக்கது. அவ்வாறே சிக்கல்களுக்குத் தீர்வாக அமைவதும் அதே நேரம், காலம்தான் எனலாம். மனித வாழ்க்கையில் காலம், நேரம் என்ற சொற்கள் இரு வேறுவிதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட கால அடிப்படையில் அமைவது காலம் என்றும் குறுகிய கால அடிப்படையில் அமைவது நேரம் என்றும் அழைக்கப்படுகின்றது. மாரி காலம், கோடை காலம் என்பன காலம் என்றும் காலை, மாலை ஆகிவற்றை நேரம் என்றும் அழைக்கின்றோம். நேரம் என்பது மணி, நிமிடம், விநாடி என்று கணக்கிடப்படுகின்றது. அதுவே நாள், வாரம், மாதம், ஆண்டு என்று நீடித்துக் காலக் கணிப்பிற்கு உட்படுகின்றது.

இம்முறையினையே சங்க இலக்கியங்கள் பெரும் பொழுது, சிறுபொழுது என்று ஐவகை நிலங்களுக்கும் வகைப்படுத்தியுள்ளன. ஓர் ஆண்டின் ஆறு பருவங்களைக் குறிப்பது பெரும்பொழுது என்றும் ஒரு நாளின் ஆறு கூறுபாடுகளைக் குறிப்பது சிறுபொழுது என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. 'காரும் மாலையும் முல்லை' (தொல்காப்பியம்: பொருளதிகாரம்) என்பதில் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது கார்காலம் என்றும் சிறுபொழுது மாலை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே ஏனைய பிற நிலங்களுக்கும் பெரும் பொழுது, சிறுபொழுது வரையறுக்கப்பட்டுள்ளன.

நேரம் என்பது மனிதர்களுக்கு அன்றாடம் வழங்கப்படுவதும், தேவைப்படுவதும், வரையறுக்கப்படுவதுமான ஓர் அரிய இயற்கை வளமாகும். நேரமானது எல்லோருக்கும் பொதுவாகவும் சமனாகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கு நாளொன்றுக்கு இருபத்து நான்கு மணித்தியாலங்கள் அல்லது 1440 நிமிடங்கள் அல்லது 86400 செக்கன்கள் கிடைக்கின்றன. இத்தகைய இயற்கையான, சமனான நேர வளத்தினை ஒவ்வொருவரும் அதனைப் பயன்படுத்தும் விதத்தில் வேறுபட்டமைகின்றது. 'நேரமில்லை','பொழுது போகவில்லை' என்று எமது அன்றாட வாழ்வில் ஒலித்துக் கொண்டிருக்கும் சொற்பிரயோகங்கள் ஒவ்வொரு தனிமனிதனும் தனது நேரத்தைப் பயன்படுத்தும் விதத்தினையே சுட்டி நிற்கின்றன. 'காலம் பொன்னானது','நேரந்தவறாமை','நேர வீண்விரயம்' போன்ற சொற்பதங்கள் எமது வாழ்விலும் உணர்விலும் கலந்து எம்மை ஒரு சுழற்சி முறையில் இயக்கிக் கொண்டிருக்கின்றன.

### *III. நேரமுகாமைத்துவம்*

நேர முகாமைத்துவம் என்பது நேரத்தை முகாமை செய்வது ஆகும். அதாவது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தும் ஆற்றலாகும். ஒவ்வொருவரும் தமது நேரத்தை வெவ்வேறு விதமாகப் பயன்படுத்துகின்றார்கள் எனினும், ஒவ்வொருவரும் நேரத்தை வினைத்திறனாகவும் நுட்பமாகவும் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். நேரத்தை நாம் கட்டுப்படுத்தும் கருவியாகப் (Controlling tool) பயன்படுத்திக் கொள்கின்றோம். அலுவலக நேரம், பாடசாலை நேரம், பரீட்சை நேரம் என்பன குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி குறிப்பிட்ட நேரத்தில் முடிவு பெறுகின்றது. நேரத்தின் அடிப்படையில்தான் உலகம் முழுவதிலும் கட்டுப்பாடு செலுத்தப்படுகின்றது.

அதிக வேலைப்பளுவோடு துரிதகதியில் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு ‘‘நேரமில்லை’’,‘‘நேரம் போதாது’’ என்று தினமும் கூறிக்கொண்டு நேரத்தோடு போராட வேண்டியுள்ளது. பணிகள் யாவும் நேரத்தைக் காட்டிலும் அதிகரித்துள்ளதாகக் கருதும் நாம் நேரம் போதாது, இன்னும் நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த அவாவோடு வாழ்க்கை என்ற அச்சில் சுழன்று கொண்டிருக்கின்றோம். நேரத்தைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்து இயங்காததன் விளைவுதான் இது என்பதை நாம் உணரவும், புரியவும் மறந்து விடுகின்றோம். மனிதர்கள் தமது நேரத்தைச் செலவிடுவதில் கவனயீனமாகவும், தடுமாறியும் கொண்டிருக்கின்றார்கள். நேரம் என்ற பெறுமதியான இயற்கை வளமானது, நம் எல்லோருக்கும் பொதுவானதாகவும் ஒவ்வொருவருக்கும் சம பங்கின் அடிப்படையிலும் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய சமபங்கு வளத்தை நாம் சேமித்து வைக்க முடியாது. அவற்றைப் பிரதியீடு செய்ய முடியாது. அவ்வாறு சேமிப்பது என்பது விரயமாகக் கருதப்படும். இதனால் நேரம் என்ற சமவளத்தை அன்று அன்றைக்கே உரிய முறையில் சிறப்பாகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரேயளவான சமபங்கு வளத்தை பயன்படுத்தும் முறையிலும் திறனிலும்தான் ஒருவருடைய வாழ்க்கையின் முன்னேற்றங்களும்,பின்னடைவுகளும் தங்கியுள்ளன. நேரத்தைத் திட்டமிட்டு வினைத்திறனாகப் பயன்படுத்துபவன் தனது வாழ்க்கையின் அடைவுமட்டங்களைச் சந்தித்துக் கொள்கின்றான். நேரம் போதாது என்று தனக்குத்தானே சமாதானம் கூறுபவன் நேரத்தை விரயம் செய்து பின்னடைவுகளைச் சந்தித்துக் கொள்கின்றான்.

இத்தகைய பெறுமதிமிக்க நேரவளத்தை உச்சப்பயன் அடையும் வகையில் நன்கு திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும். நேரத்தைத் திட்டமிடும்போது வாழ்வின் அனைத்துக்கூறுகளையும் உள்ளடக்கும் விதத்தில் நேரத்தைத் திட்டமிட வேண்டும். அதாவது தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், தொழில், சமயம், பண்பாடு, கலை, பொழுதுபோக்கு என்று அனைத்துக்கூறுகளையும் உள்ளடக்கும் வகையில் நேரத்தைத் திட்டமிட்டு முகாமை செய்ய வேண்டும். காலமும் நேரமும் எந்த மனிதருக்காகவும் காத்திருப்பதில்லை என்பதனால், நேரத்தை உரிய முறையில் முகாமை செய்வது என்பது தனிமனிதப் பொறுப்பாகும். ‘‘நேரத்தைப் பிடிக்க வேண்டுமெனில் அது உன்னை எதிர்கொண்டு வரும்போது பிடித்துக்கொள்,கடந்தபின் பிடித்துக்கொள்ள முடியாது’’ என்பது அறிஞர்களின் கருத்தாகும். அத்துடன் நேரம் என்பது நேர்கோட்டில் இயங்குவதனால் அது ஆரம்பப்புள்ளியை ஒருபோதும் சந்திக்காது. ஆகவே, நேரத்தை முகாமை செய்து நமது செயற்பாடுகளைச் செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

### *IV. நேரமுகாமைத்துவமும் திருக்குறளும்*

இந்தவகையில் நேரத்தின் முதன்மையை அறிந்த வள்ளுவரும் நேரமுகாமைத்துவம் பற்றித் தனது நூலான திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பிரிவுகளிலும் எடுத்துக் கூறியுள்ளார். திருக்குறள் காட்டும் நேரத்தை உண்மை நேரம் என்றும் உணர்வு நேரம் என்றும் இரண்டாகப் பிரித்து நோக்கலாம். உண்மை நேரம் என்பது கடிகாரத்தினால் நிர்ணயிக்கப்படுவது. அது நபருக்கு நபர் வேறுபாடற்றது. சமனானது. ஒரு வளமாக குறிப்பிட்ட இலக்குகளில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றது. உணர்வு நேரம் என்பது உண்மை

நேரத்திற்கு மாறானது. மனிதர்களால் உணரப்படுவது.அது மனிதருக்கு மனிதர் மாறுபடும். அன்பிற்குரியவர்களைச் சில நாட்களே பிரிந்திருப்பினும் அக்காலம் யுகம் யுகமாகத் தோன்றும். அவர்களுடன் பல மணி நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் அந்நேரம் சில விநாடிகளே கழிந்தது போல தோன்றும். எனவே, உணர்வு நேரம் மனிதனின் மனத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது. அதற்கு எல்லைகள் கிடையாது. அவரவர் மனநிலைக்கேற்ப உணர்வு நேரம் மாறுபடும். ஒரு மணி நேரம் ஒரு விநாடியாகவும் தோன்றும் அதேவேளை ஒரு யுகமாகவும் தோன்றும். எனவே, உணர்வு நேரம் அளவைக்குட்படாதது.

திருக்குறளின் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் உண்மை நேரம் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. காமத்துப்பாலில் உணர்வு நேரம் பற்றிய கருத்துக்கள் தலைவன் - தலைவியின் எடுத்துக்கூறுவதனூடாகப் புலப்படுத்தப்படுகின்றன. அறத்துப்பாலில் காலத்தின் பெருமையையும்,முதன்மையையும் அறிந்து உதவி செய்வதைப் பற்றி,

"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள் 102)

என்ற குறளில் காட்டப்படுகின்றது. நெருக்கடியான நேரத்தில் தேவையானபோது ஒருவன் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது இந்த உலகத்தை விட மிகப் பெரியதாகும். குறிப்பிட்ட உரிய நேரத்தையும் (On time), இடத்தையும் (On the spot) கருத்திற் கொண்டு பணியாற்றின் அது போற்றப்பட வேண்டியதாகும்.

பொருட்பாலில் 'காலம் அறிதல்'(அதிகாரம் 49) என்ற அதிகாரத்தில் நேரத்தை முகாமை செய்வது தொடர்பாகவும், ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்ற காலத்தை அறிவது தொடர்பாகவும் கூறப்படுகின்றது.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" (குறள் 484)

என்று தகுந்த காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் ஒருவன் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினாலும் அச்செயல் கைகூடும் என்பது அக்குறளின் பொருளாகும். ஒரு செயலைச் செய்வதற்குரிய பொருத்தமான நேரத்தைத் தெரிவுசெய்து பணியாற்றும் போது மிகப் பெரிய பணிகளையும் இலகுவாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்ற முடிகின்றது. இங்கு நேரத்தை முகாமை செய்தல், திட்டமிடுதல், செயலாற்றுதல் ஆகிய முகாமைத்துவச் சிந்தனைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்ற காலத்தை விளக்கும் பழமொழியின் கருத்துக்கு அமைவாகத் திருக்குறளும் பொருத்தமான சந்தர்ப்ப சூழ்நிலை வரும்போது செயற்கரிய செயல்கள் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட வேண்டும் என்பதனை,

"எய்தற்கு அரியது இறைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்" (குறள் 489)

என்ற குறளின் வாயிலாக விளக்குகின்றது. அவ்வாறே திட்டமிட்டுச் செய்ய வேண்டிய செயல்களைத் திட்டமிட்டு மெதுவாகவும், விரைந்து செய்ய வேண்டிய செயல்களைக் காலம் கடத்தாமல் விரைவாகவும் செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. இதனை,

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க

தூங்காது செய்யும் வினை'' (குறள் 672)

என்ற குறள் மூலம் காட்டப்படுகின்றது. இது சமகால நேர முகாமைத்துவத்தோடு தொடர்புடைய முக்கியம் - அவசரம் (Do it now), முக்கியம் - அவசரமல்ல (Plan it), முக்கியமல்ல - அவசரம் (Delegate it) முக்கியமல்ல - அவசரமல்ல (Delete it) என்னும் பகுப்பைக் கொண்ட 'Matrix to do list' என்ற நேரமுகாமைத்துவக் கோட்பாட்டுடன் பொருந்துகின்றது. பணியாளர்களும் தமது முகாமையாளர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது நேரத்தைத் திட்டமிட்டு ஏற்ற சமயம் பார்த்து தம் மனதில் எண்ணியவற்றைச் சொல்ல வேண்டும் என்பதை பின்வரும் குறட்பாக்களின் மூலம் காட்டுகின்றார்.

''கடன்அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை'' (குறள் 687)

''குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்புஇல்
வேண்டுப வேட்பச் சொலல்'' (குறள் 696)

மேலும், நேரத்தை வீண் விரயம் செய்தல் கூடாது வினைத்திறனாகச் செயலாற்றுதல் வேண்டும் என்பதை,

''வினையால் வினையாக்கிக் கோடல் நனைவுகள்
யானையால் யானையாத் தற்று'' (குறள் 678)

என்ற குறள் மூலம் காட்டுகின்றார். ஒரு நிகழ்வு நடைபெறும்போது அதனோடு ஒத்த வேறொரு செயலைச் செய்து முடித்துக் கொள்ளுவதன் ஊடாக நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பது அக்குறளின் பொருளாகும். அத்துடன் திருவள்ளுவர் நேர வீண்விரயத்தைக் கண்டிக்கின்றார்.

''சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது'' (குறள் 671)

என்ற குறள் மூலம் ஒரு விடயம் தொடர்பாக ஆலோசனை செய்வதன் நோக்கம் ஒரு செயலைச் செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா எனத் தீர்மானிப்பது ஆகும். இதுவே ஆலோசனையின் எல்லையாக அமைகின்றது. இத்தீர்மானத்தை உடனே நிறைவேற்றாமல் காலங்கடத்துவது குற்றமாகும் என்று கூறுகின்றார். நேர முகாமைத்துவத்தினுள் இழப்பு நேரம் (நேர வீண் விரயம்), வினைத்திறனாக நேரத்தைப் பயன்படுத்துதல் என்ற இரு விடயங்கள் உள்ளடங்குகின்றன.

அவ்வாறே மேற்கூறப்பட்ட உண்மை நேரம் மட்டுமன்றி, உணர்வுகளோடு தொடர்புடைய உணர்வு நேரம் பற்றிய கருத்துக்களைக் காமத்துப்பால் அதிகாரத்தில் கூறியுள்ளார். களவியலில் சந்திக்காமல் தடுக்கப்பட்ட தலைவனும் தலைவியும் தமக்கு மாலைப் பொழுது நீண்ட கொடிய பொழுதாகத் தோன்றுகின்றது என்பதை,

''தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்'' (குறள் 1135)

என்று தலைவியைக் கண்டு கொள்ளாத தலைவன் மாலை வேளையில் காதல் துயரால் படும் துன்பம் நீண்டதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறே கற்பியலில் 'பிரிவு ஆற்றாமை' (அதிகாரம் 116) என்ற அதிகாரத்தில் தலைவனது

பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தலைவி வருந்துவதன் அப்பிரிவின் கொடுமையும் நீட்சியும் உணர்வு நேரத்தின் மூலம் காட்டப்படுகின்றது. இதனை,

''செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை'' (குறள் 1151)

என்று தலைவியினால் தலைவனின் பிரிவைத் தாங்க முடியாது. அது கொடுமையாகவும் நீண்டதாகவும் இருக்கும். எனவே, தலைவன் பிரிந்து போய் விரைந்து வருதல் பற்றிச் சொல்வதானால் பொறுத்திருந்து உயிர் வாழ்பவருக்குச் சொல் என்பதே அக்குறட்பாவின் பொருளாகும். தலைவன் ஏதேனும் நிமித்தம் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய நிலைப்பாட்டினைத் தலைவியானவள் குறிப்பால் அறிந்தாலும்கூட அந்த நீண்ட காலத்தை எண்ணி வருந்துவதாகக் குறட்பாக்கள் உள்ளன. (பிரிவு ஆற்றாமை அதிகாரம் 116). அடுத்து, பிரிந்து சென்ற தலைவனின் பிரிவைப் பொறுக்கமாட்டாது தலைவி வருந்தி மெலிவதாகக் கூறப்படுவதும் உணர்வு நேரத்தின் பாற்பட்டதேயாகும். இரவுப் பொழுது மற்ற எல்லா உயிர்களையும் தூங்க வைத்து விட்டதனால், இரவு முழுவதும் தூங்காமல் தலைவி தனித்திருப்பதனால் தலைவிக்கு நீண்டதாக உணரப்படுகின்றது என்பதனை,

''மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்அல்லது இல்லை துணை'' (குறள் 1168)

என்ற குறள் மூலம் காட்டப்படுகின்றது. அவ்வாறே, முன்பு தலைவனோடு கூடி இன்புற்ற நாட்களில் எல்லாம் குறுகியனவாக இருந்த இரவுகள், இன்று அவரைப் பிரிந்து துன்புறுங்காலத்து மிக நீண்டு செல்கின்றன. ஆதலால் அவை அக்கொடியவர் கொடுமையைவிட மிதமிஞ்சிய கொடுமை உடையவை என்று தலைவனின் பிரிவுக்காலத்தை நீண்டதாக எண்ணி அக்காலம் தலைவனைக் காட்டிலும் கொடியவனாகத் தென்படுகின்றது என்று கூறுகின்றாள்.இக்கருத்தினை,

''கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா'' (குறள் 1169)

அவ்வாறே மாலைப் பொழுது என்பது தலைவனில்லாத தலைவிகுத் துன்பம் தருவதாக உணரப்படுகின்றது. இதனைப் 'பொழுது கண்டிரங்கல்' (அதிகாரம்123) என்ற அதிகாரத்தில் வரும் குறட்பாக்களின் மூலம் எடுத்துக் கூறுகின்றார்.

''மாலையோ அல்லை மணந்தார் உணிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது'' (குறள் 1221)

என்று மாலைப் பொழுதினை விளித்து,'நீ முன் நாட்களில் வந்த மாலைப் பொழுதல்ல. காதலரை மணந்து பிரிந்த மகளிரைக் கொல்லும் இறுதிக்காலமாகவே இருக்கின்றாய்' என்று மாலைப் பொழுதினைக் கடிந்து கொள்வதாக உள்ளது. அவ்வாறே முன்பெல்லாம் இனிதாக ஒலித்த இடையனின் புல்லாங்குழல், இப்போது தீப்போல சுடும் மாலைப் பொழுதுக்குத் தூதாக வந்து என்னைக் கொல்வது போல் துன்புறுத்துகின்றது என்ற உணர்வு நேரத்தினை,

''அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
மாலை படர்தரும் போழ்து'' (குறள் 129)

எனக் கூறப்படுகின்றது. சிலவேளைகளில் உணர்வு நேரத்தில் நேர எல்லையை வரையறுக்கும்போது சிக்கலும் (சந்தேகம் /ஊடல்) உண்டாகின்றது.

> "இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
> கண்நிறை நீர்கொண் டனள்" (குறள் 1315)

என்ற குறளில் இப்பிறப்பில் நாம் ஒருபோதும் பிரியமாட்டோம் என்று தலைவன் கூறும்போது மறுபிறப்பில் பிரிந்து போவேன் என்று குறித்ததாகத் தலைவி ஊடல் துன்புற்று ஊடல் கொள்வதாகவும் காட்டப்படுகின்றது.

தலைவியின் கண்கள் தலைவனை விரைந்து காணும் பொழுதினை எண்ணி விருப்பதால் வருந்துவதனையும் வள்ளுவர் காட்டுகின்றார். அத்துடன் பிரிந்து சென்ற தலைவன் விரைந்து வருவார் என்றும் அதன்பின் இன்புற்று வாழ்வோம் என்னும் மிடுக்கும் உணர்வு நேரத்தின் பாற்பட்டதாகும். உணர்வு நேரமானது காலம் குறுகியது, காலம் நீண்டது, ஒருவருக்கு இன்பமானது, ஒருவருக்குத் துன்பமானது, காலம் மெதுவானது, காலம் விரைவானது ஆகியஎண்ணங்களை மனதில் நிலை நிறுத்துகின்றதுடன். முன்னர் நிகழ்ந்த விடயங்களை மீளவும் எண்ணிப் பார்க்கவும் (Flashback), கனவு காணவும், புலம்பவும் செய்கின்றது.

பொதுவாக, அகத்திணை மரபில் களவியலில் தலைவன் தலைவியைச் சந்தித்தல், கூடுதல் என்பன நீண்ட நேரப் பொழுதாக இருப்பினும், சிறு நேரப்பொழுதாகவே மனதினால் உணரப்படுகின்றது. தலைவன் - தலைவியர் பிரிவு, பிரிவாற்றியிருத்தல், வருகைக்காகக் காத்திருத்தல் என்பன பருவம் குறித்துச் சென்றிருப்பினும் நீண்ட நேரமாகவும், நெடுங்காலமாகவும் உணரப்படுகின்றது. குறித்துச் சென்ற பருவம் தொடர்பான மாற்றங்கள் இயற்கையில் ஆரம்பிப்பதற்கு முன்னரே தலைவியின் வருத்தம் அதிகமாகி, தலைவன் காலம் தவறியதாக உணரப்படுவதனைச் சங்க அகத்திணை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உணர்வு நேரத்தில் ஒருவருக்கு மகிழ்ச்சியான நேரம் அடுத்தவருக்குத் துன்பமான நேரமாக இருக்கும். ஒருவருக்கு நல்ல நேரம் அடுத்தவருக்குக் கெட்ட நேரமாக இருக்கும். ஒருவருக்கு நேரம் மெதுவாகச் செல்லும். மற்றவருக்கு நேரம் விரைவாகச் செல்லும்.

இந்தவகையில், உண்மை நேரமும் உணர்வு நேரமும் மாறானவை என்றாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை ஆகும். நேர எல்லையைக் கருத்திற்கொண்டு உண்மை நேரத்திலும்சரி, உணர்வு நேரத்திலும்சரி காலம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது, நேரக்கணிப்பு, காலக்கணிப்பு என்பன உண்மை நேரத்திலும் உணர்வு நேரத்திலும் உள்ளன. 'பருவம் குறித்துச் செல்லுதல்','பொழுது கண்டிரங்குதல்' ஆகிய இலக்கியச் சொற்பதங்கள் உணர்வு நேரத்தின் நேர எல்லையைக் குறிக்கின்றன. காலம் தவறின், இவ்விருவகையான நேரத்திலும் மனிதனுக்குத் துன்பமும், பதற்றமும், அழுத்தமும் ஏற்படுகின்றன என்பதுதான் யதார்த்தநிலைப்பாடாகும்.

***துணை நூல்கள்:***

[1] இரவீந்திரன், மு., 2005, திருக்குறள் காட்டும் நிர்வாக இயல் - வணிக இயல், சென்னை: வானதி பதிப்பகம்.
[2] கனகசிங்கம், வ., 2006, சமகால முகாமைத்துவம், கொழும்பு - சென்னை: குமரன் அச்சகம்.
[3] வேல்நம்பி, தி., 2009, திருக்குறளும் முகாமைத்துவமும் - ஓர் ஒப்பீட்டாய்வு, கொழும்பு: சேமமடு பதிப்பகம்.
[4] திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், 1976, சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
[5] Chandan, S. J.,1997,Management: Theory and Practice, New Delhi: Vikas Publishing House Pvt Ltd.